**ஹபுதளை பிரதேச சபை**

**பதுளை மாவட்டம்**

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்டம்பர் 06 ஆந் திகதி சபைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

------------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஹபுதளை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது சபைக்குக் கிடைத்திருந்த கப் வண்டியின் பெறுமதியாகிய ரூபா 2,795,000 தொகையினை நிலையான சொத்துக்களில் உட்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) உள்நாட்டு கட்டணங்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றிருந்த கடன்கள் மீது செலுத்த வேண்டிய வட்டி நிதிக் கூற்றுக்களில் ரூபா 579,273 தொகையினை அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான நீதி மன்றத் தண்டப் பண வருமானம் ரூபா 389,487 தொகையினால் குறைவாகவும் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 3,297,282 தொகையினால் மிகையாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

--------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 10,441,121 தொகையாகக் காணப்பட்டதுடன் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 7,260,384 ஆக இருந்தது.

2. நிதி மீளாய்வு

--------------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------------

சமர்க்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,341,259 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 50,538 ஆக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

----------------------------------

2.2.1 வீத வரி

-------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் பிரகாரம் வீதவரிக்கான பெறுமதி மதிப்பீடு இறுதியாக 2002 ஆண்டின் போதே மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் 5 வருடங்களுக்கு ஒரு முறை ஆதனங்களின் வருடாந்தப் பெறுமதி பெறுமதி மதிப்பீடு செய்யப்படாமையால் வீதவரி வருமானம் குறைந்த நிலையில் காணப்பட்டது.

2.2.2 அனுமதிப்பத்திரக் கட்டணம்

---------------------------------------------

(அ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றலா பிரயாணிகளின் கவர்ச்சியை கொண்டுள்ள எடிசன் பங்களா மற்றும் லீப்டன் சீட் பார்வை நிலையத்தை சேர்ந்த 03 வர்த்தக நிறுவனங்களுக்காக 2015 ஆண்டின் போது வர்த்தக அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை.

(ஆ) இலங்கை குடியரசின் 2014 திசெம்பர் 12 திகதிய 1893 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பிரதேசத்தில் நிறுவியுள்ள 9 செலுத்துகை டவர்களுக்காக அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.2.3 வாடகை

------------------

உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 திகதிய 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் மாதாந்த வாடகை பிரதான பெறுமதி மதிப்பீட்டாளரின் அல்லது உள்ளூராட்சி நிறுவனங்களுடன் தொடர்புடைய பெறுமதி மதிப்பீட்டாளரின் மூலம் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாமல் சபைக்குச் சொந்தமான 43 கடைகள் 2012 செப்டம்பர் 28 திகதி மற்றும் 2013 ஜனவரி 31 நடைபெற்ற சபைக் கூட்டங்களின் தீர்மானங்களின் பிரகாரம் வாடகை அறவிடப்பட்டிருந்தது.

2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

------------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரினால் மற்றும் ஏனைய அதிகாரிகளினால் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணமாக ரூபா 704,869 தொகையும் மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 5,855,400 தொகையும் அறவீடு செய்யப்பட வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

-------------------------------------------------------

(அ) 2015 மே 15 திகதி சபையின் பதவிக் காலம் முடியவடைந்த பின்னர் சபையின் 09 அங்கத்தவர்களுக்காக 2015 மே மாதத்திற்கான சபை அமர்வுப் படியாக ரூபா 90,000 தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் 2014 இன் கீழ் நிர்மாண வேலைகளுக்காக சபைக்கு கிடைத்திருந்த பணத்தில் இருந்து ரூபா 85,356 தொகையொன்று மீளாய்வாண்டின் போது மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.

(இ) அரச தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயம் 1:6 மற்றும் 4 ஆம் பிரிவுகளின் பிரகாரம் சபையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள 11 ஊழியர்களிடம் 2007 முதல் 2011 ஆண்டு வரையான காலப் பகுதிக்கான நிலுவைத் தொகை ரூபா 54,562 இற்கான பதவியணிக் கடன்தொகை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------------------------------------

(அ) ஹபுதலை பிரதேச செயலாளருக்குச் சொந்தமான 03 காணிப் பகுதிகளில் பிரதேச சபையினால் கட்டிடம் நிர்மாணித்து வெளிசாராருக்கு வாடகைக்குக் கொடுத்திருந்ததுடன் குறிப்பிட்ட நிர்மாண வேலைகள் அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் என கணித்து பிரதேச செயலாளர் சட்டநடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஆ) வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான ரொஹெம்டன் - தியதலாவ - பண்டாரவெல தேசிய பெருந்தெருக்களைச் சேர்ந்த காணியில் ரூபா 2,000,000 தொகை ஒன்றினை செலவிட்டு சபையினால் 19 கடைகள் நிர்மாணிக்கப்பட்டு மாதாந்தம் வாடகை செலுத்தும் அடிப்படையில் மற்றும் 03 வருட காலத்திற்கு ரூபா 6,945,751 தொகை ஒன்று திருப்பிச் செலுத்தப்படாத முன் விற்பனவுப் பெறுமதி ஒன்று அறவிடப்பட்டு வெளிசாராருக்கு வாடகைக்கு வழங்கியிருந்த போதிலும் மேற்கூறிய நிர்மாண வேலை அங்கீகாரம் அற்ற நிர்மாண வேலை என கணித்து வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாண வேலைகளை அகற்றுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

--------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---------------------------------

மீளாய்வாண்டின் போது பாதீடு, வருமானம் மற்றும் செலவுக் கட்டுப்பாட்டில் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை.

4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

-------------------------------------------------

நடைமுறை ஆண்டில் வருடாந்த பெறுகைகள் திட்டம் ஒன்று செயற்படுத்தியிருக்கவில்லை.

4.3 உள்ளகக் கணக்காய்வு

-----------------------------------

2015 ஆண்டிற்காக பிரதேச சபை தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தல்

---------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது முகாமைத்துவக் குழு செயற்பட்டிருக்கவில்லை.

4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

------------------------------------------------

விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------------

சபைக்குச் சொந்தமான ரூபா 6,180,000 பெறுமதியான 2010 ஆண்டு கொள்வனவு செய்திருந்த மைக்ரோ கப் வண்டி மற்றும் 1998 மற்றும் 2000 ஆண்டுகளின் போது கொள்வனவு செய்திருந்த பெறுமதி சமர்ப்பிக்கப்படாத இரண்டு கப் வண்டிகள் விளைவற்ற நிலையில் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) அகக் கட்டுப்பாடு

(ஆ) கணக்கீடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம் இருப்புக் கட்டுப்பாடு

(உ) ஒப்பந்த நிருவாகம்